தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இன்று வேளாண் பல்கலை.யில் புத்தகக் கண்காட்சி தொடக்கம்

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புத்தக கண்காட்சி செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது.

பிப்.13 ஆம் தேதி வரை மூன்று நாள்கள் நடைபெறும் புத்தக கண்காட்சியை பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தொடங்கி வைக்கிறார். இதில், வேளாண்மைப் பல்கலைக்கழகம், சென்னையில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தோடு ஒப்பந்தம் செய்து கொள்ள இருக்கிறது. இதன்மூலம் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.இதுதவிர படைப்பாளிகள்-வெளியீட்டாளர்கள் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியை பார்வையிட அனுமதி இலவசம். இங்கு புத்தகம் வாங்குவோருக்கு 20 சதவீத சிறப்பு சலுகையும் உண்டு. காலை 9 முதல் மாலை 6 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

## வீடு கட்ட, கறவை மாடு வளர்க்க நிதி உதவி: பழங்குடியினர் விண்ணப்பிக்கலாம்

**கோவை,**

வீடு கட்டுவதற்கும், கறவை மாடு வளர்ப்புக்கும் நிதி உதவி பெற பழங்குடியின மக்கள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் உள்ள இருளர் மற்றும் காட்டு நாயக்கன் இனத்தைச் சேர்ந்த பழங்குடியினத்தவர்களுக்கு உகந்த வீடுகள் கட்டுவதற்கும், கறவை மாடு வளர்ப்புக்கும் மத்திய அரசின் கீழ் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதற்காக 2013-14 ஆம் நிதியாண்டிற்கு ரூ.67.20 லட்சம் நிதி ஒதுக்கீடு, மத்திய அரசின் நிதி உதவி திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிகளை பெற விரும்பும் இருளர் மற்றும் காட்டுநாயக்கன் இன மக்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரிடம் விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**பி.ஏ.பி. திட்டத்தில் கடைமடை தொட்டிக்கு முழு அளவில் தண்ணீர் வழங்கக் கோரிக்கை**

**கோவை,**

பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்டத்தில் (பிஏபி), கடைமடை தொட்டிக்கு முழு அளவில் தண்ணீர் வழங்க வேண்டும் என பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் மனு அளித்துள்ளனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் முகாமில், பொள்ளாச்சி சின்னப்பம்பாளையம் பகுதியைச் சேர்ந்த கோபால்சாமி உள்ளிட்ட விவசாயிகள் அளித்த மனு விவரம்:

பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டம், ஆழியாறு அணை, வேட்டைக்காரன்புதூர் கால்வாய், பெரியபோது பகிர்வு வாய்க்கால், கிளை கால்வாய் பாசனம் இரண்டாம் சுழற்சியின் கடைமடை விவசாயிகளான எங்களுக்கு பிப்ரவரி 7 ஆம் தேதி பாசனத்திற்கு கடைசி தண்ணீர் திறக்கப்பட்டது.எங்களது கடைமடை தொட்டியின் மூலம் 165.90 ஏக்கர் பாசனம் பெறுகிறது. இந்த தொட்டிக்கு முழு அளவில் தண்ணீர் வழங்கப்படாத சூழ்நிலையில், போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல் பாதிப்பு அடைந்துள்ளோம். மேலும், தண்ணீர் வரத்து குறைவாக உள்ளதால் விவசாயிகளிடையே ஒற்றுமை குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.எனவே, விவசாயிகளிடம் மோதல் போக்கை தவிர்க்கவும், பயிர்களையும், கால்நடைகளையும் காப்பதற்கும் முழு அளவு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**கண்காட்சியில் மயிலைக் காளை முதலிடம்:விவசாயிக்கு பாராட்டு**

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்ட காங்கயம் இன கால்நடை கண்காட்சியில் மயிலை காளை பிரிவில் முதலிடம் பெற்ற காளையின் உரிமையாளருக்கு வாவிபாளையத்தில் திங்கள்கிழமை பாராட்டு விழா நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தில், காங்கயம் இனக் கால்நடை கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

அதில் பல்லடம் அருகேயுள்ள வாவிபாளையம் கிராமம், காரக்காட்டுத் தோட்டத்தைச் சேர்ந்த விவசாயி வசந்தகுமார், ருக்மணி ஆகியோரின் மகன் ஆதிஆனந் என்பவரின் 2 வயது காளை மயிலை பிரிவில், திருப்பூர் மாவட்டத்தில் முதலிடம் பெற்றது.

இதற்கான பரிசுத்தொகை ரூ. 10 ஆயிரம், கோப்பை மற்றும் சான்றிதழை கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வழங்கினார். இதைப் பாராட்டி, வாவிபாளையம் ஊராட்சி கிராம மக்கள் சார்பில் திங்கள்கிழமை அவருக்கு பாராட்டு விழா நடைபெற்றது .

இதில் ஊராட்சி மன்றத் தலைவர் பார்த்தசாரதி, ஒன்றிய கவுன்சிலர் அனந்தகிருஷ்ணன், உழவர் உழைப்பாளர் கட்சியின் மாவட்ட இளைஞரணித் தலைவர் சோமசுந்தரம் மற்றும் விவசாயிகள் பலர் வசந்தகுமாரின் குடும்பத்தினருக்கு சால்வை அணிவித்து பாராட்டினர். முதலிடம் பெற்ற மயிலை காளைக்கும் பொன்னாடை அணிவிக்கப்பட்டு, பசுந்தீவனம் வழங்கப்பட்டது.

**தென்னிந்திய நெல் உற்பத்தியாளர்கள் கம்பெனி நிறுவனம் தொடக்க விழா**

**பெருந்துறை,**

சென்னிமலையில் தென்னிந்திய நெல் உற்பத்தியாளர்கள் கம்பெனி நிறுவனம் தொடக்க விழா மற்றும் மாநில அளவில் சிறந்த நெல் உற்பத்திக்காக பரிசு பெற்ற விவசாயிக்கு பாராட்டு விழா ஆகியவை  திங்கள்கிழமை நடைபெற்றது.

உழவர் உற்பத்தியாளர்கள் கம்பெனி தொடங்க வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில், சென்னிமலையில் தென்னிந்திய நெல் உற்பத்தியாளர்கள் கம்பெனி நிறுவனம் தொடக்க விழா நடைபெற்றது.

விழாவிற்கு இமைகள் அறக்கட்டளை தலைவர் ஓ.பி.தங்கவேலு தலைமை வகித்தார். எல்-9 கீழ்பவானி முறை நீர் பாசன விவசாயிகள் சபைத் தலைவர் கே.ஆர். தங்கராஜ் முன்னிலை வகித்தார். ஈரோடு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ராம.சுப்பிரமணியம், வேளாண் உதவி இயக்குநர் வெ. ஆசைத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டு நிறுவனத்தை தொடங்கி வைத்து பேசினர்.

ஈரோடு மாவட்ட வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை துறை சார்பில் தமிழகத்திலேயே நெல் உற்பத்தியில் அதிக மகசூல் செய்த நசியனூரை சேர்ந்த விவசாயி பரமேஷ்வரனுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

விவசாயி பரமேஷ்வரன் பேசுகையில், பி.பி.டி-5204 என்ற நெல் ரகத்தை, வேளாண் துறையினர் உதவியுடன், திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் 4.5 ஏக்கரில் பயிரிட்டிருந்தேன். ஏக்கருக்கு 6,110 கிலோ மகசூல் செய்தேன் என்றார்.

விழாவில், எல்-9 பாசன சபை இணைச் செயலாளர் ஜெகநாதன், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.34 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 42.34 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 399 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அணையில்

நீர்இருப்பு 2.8 டி.எம்.சி.

**உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர் நாற்றுகள் விற்பனை துவக்கம்**

**உதகை,**

உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் மலர் நாற்றுகள் விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தாவரவியல் பூங்கா தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் உமாராணி வெளியிட்ட அறிக்கை:

மலர் நாற்றுகளான சிவப்பு சால்வியா, பென்ஸ்டீமன், டெல்பீனியம், ஸ்வீட் பீஸ், டெய்சி, ஸ்வீட் வில்லியம், பிளாக்ஸ், வெர்பீனா, டயான்தஸ், அஜிரேட்டம், சப்னேரியா, கேண்டிடப்ட், பெட்டூனியா, கொடிசீயா, டயான்தஸ், மிக்ஸ், லூபின், காஸ்மாஸ், கேலண்டூலா, ஆஸ்டர், பேன்சி, சானோகிளாசம், டேலியா, பாப்பி, பால்சம், ஜிப்சோபில்லம், சன்பிளவர், ஹெலிகிரிசம், ஜனியா, பிரெஞ்ச் மெரிகோல்டு, லேடீஸ் லேஸ் ஆகிய மலர் ரக நாற்றுகள் மிகக் குறைந்த விலையில் உதகை அரசினர் தாவரவியல் பூங்கா வளாகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

விருப்பமுள்ள இல்லதரசிகள், பூங்கா பராமரிப்பாளர்கள், சுற்றுலாப் பயணிகள் இந்த வாய்ப்பைப்

பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"மகாராஷ்டிரத்தில் வேளாண் கண்காட்சி: நேரடி ஒளிபரப்பைக் காணலாம்'**

**தண்டராம்பட்டு,**

மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடைபெறும் தேசிய வேளாண் கண்காட்சியை நேரடியாக  தண்டராம்பட்டில் விவசாயிகள் காணலாம் என தண்டராம்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ.பாலா தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் பிப்ரவரி 9-ம்தேதி முதல் 13-ம்தேதி வரை தேசிய வேளாண் கண்காட்சி நடைபெறுகிறது. இதில் சுமார் 200-க்கும் மேல் கருத்துக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. வேளாண் விஞ்ஞானிகளின் கருத்துரைகளும் இடம் பெறுகின்றன.

இக் கண்காட்சி நிகழ்ச்சிகளை, கண்காட்சி நாள்களில் தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நேரடியாக காணொளி காட்சி மூலம் விவசாயிகள் இலவசமாகப் பார்வையிடும் வகையில் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் வேளாண் துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கரும்பில் பஞ்சு அசுவினி: கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பில் ஆங்காங்கே தென்படும் பஞ்சு அசுவினியைக் கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் கூறியது:

அசுவினி தாக்கப்பட்ட கரும்புப் பயிரின் தோகையின் அடிப்புறம் வெள்ளை நிறப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படும். குஞ்சுகளும், வளர்ந்த பூச்சிகளும் தோகையின் அடிப்புறம் சாற்றை உறிஞ்சி வாழும். தாக்கப்பட்ட இலைகளில் வெள்ளை நிற துகள்கள் படிந்திருக்கும். தோகை மஞ்சள் நிறமாக மாறி காய்ந்து போயிருக்கும்.

பஞ்சு அசுவினியைக் கட்டுப்படுத்தத் தரமான விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைக் கரணைகளை உபயோகிக்க வேண்டும். இரட்டைப்பார் நடவு முறையைப் பின்பற்ற வேண்டும். தொழு உரம், பசுந்தாள் உரம், உயிர் உரம் ஆகிய அங்கக உரங்களை அதிக அளவு பயன்படுத்த வேண்டும்.

ரசாயன உரங்களின் அளவைக் குறைத்திட வேண்டும். கரும்பில் காய்ந்த தோகையை உறித்து காற்றோட்டத்தை அதிகப்படுத்த வேண்டும். வடிகால் வசதியை மேம்படுத்த வேண்டும். வரிசையாக கரும்புப் பயிர்களை விட்டம் கட்ட வேண்டும். சேதம் அதிகமாகும் போது அசிப்பேட் 75 சதம் 2 கிராமுக்கு ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம் என்றார் அவர்.

**விவசாயிகளின் துயர் துடைக்க மானிய விலையில் உலர் தீவனம்**

**எடப்பாடி,**

வறட்சிக் காலத்தில் விவசாயிகளின் துயர் துடைக்க மானிய விலையில் கால்நடைகளுக்கு உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயப்படுத்தி வருவதாக மாநில நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி கூறினார்.

வறட்சி காலத்தில் கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையைப் போக்க மாநிலம் முழுவதும் 125 இடங்களில் உலர் தீவனக் கிடங்கு அமைக்கப்படும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதனடிப்படையில், சேலம் மாவட்டத்தில் கொங்கணாபுரம், நங்கவள்ளி, மேச்சேரி, நரசோதிப்பட்டி, தலைவாசல் ஆகிய ஐந்து இடங்களில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் உலர் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில், திங்கள்கிழமை சேலம் மாவட்டத்தில் 5 உலர் தீவன கிடங்குகளும் திறக்கப்பட்டன.  கொங்கணாபுரத்தில் நடைபெற்ற விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் செல்வராஜ் தலைமை வகித்தார். கால்நடைத்  துறை மாவட்ட இணை இயக்குனர் சிவப்பிரகாசம் வரவேற்றார். உலர் தீவனக் கிடங்கை திறந்து வைத்து அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பேசியது:

தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகளின் கால்நடைகளுக்கு உலர் தீவனங்கள் மானிய விலையில் வழங்க கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள்  உலர் தீவனங்களை வாங்க பதிவு செய்துள்ளனர்.

கொங்கணாபுரத்தில் 3,200 விவசாயிகள் மானிய விலையில் தீவனங்களைப் பெற பதிவு செய்துள்ளனர். வெளிச் சந்தையில் கிலோ ரூ.10க்கு விற்கப்படும் தீவனம் இங்கு ரூ.2க்கு வழங்கப்படுகிறது.

ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் வாரந்தோறும் 21 கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். இதனை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர்.

இந்த விழாவில் கொங்கணாபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் கரட்டூர் கே.மணி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ராஜேந்திரன், எருமப்பட்டி மாணிக்கம், ஒன்றிய உறுப்பினர் பி.ராமமூர்த்தி, பேரூராட்சித் தலைவர் ஜி.பழனிசாமி ஆகியோர் உள்ளனர்.

**புதுகை ஆவின் பால் உற்பத்தி நிலைய சோதனை ஓட்டம்: ஆட்சியர் ஆய்வு**
**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட ஆவின் பால் உற்பத்தி நிலையத்தில் சுமார் ரூ. 3 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதை ஆட்சியர் செ. மனோகரன் அண்மையில் பார்வையிட்டார்.

அதில், பால் குளிர்விக்கும் இடம், பால் பரிசோதனை இடம், பாக்கெட் பால் தயார் செய்யும் இயந்திரம், பால் வெப்பமாக்கும் இயந்திரம், கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் ஜெனரேட்டர் இயந்திரங்களின் இயக்கங்கள் சோதனையிடப்பட்டன.

ஆய்வின்போது, ஆவின் நிலைய அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மீன்துறை அலுவலகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஆட்சியர் உத்தரவு**
**நாகர்கோவில்,**

நாகர்கோவிலில் மீன்துறை துணை மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களை ஒரே இடத்தில் செயல்பட மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை உத்தரவிட்டார்.

இது குறித்து ஆட்சியர் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குமரி மாவட்ட மீனவ மக்களின் நலன்கருதியும், அவர்களின் குறைகளை உடனுக்குடன் சரிசெய்யும் நோக்கத்தில் அரசின் உத்தரவிற்கிணங்க மீன்துறையின் துணை

மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களை ஒரே இடத்தில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் மீன்துறை துணை இயக்குநர் மண்டல அலுவலகம் 2012-ஆம் ஆண்டு முதல் ராமவர்மபுரம் சற்குணவீதியில் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தின் அதிகார நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் வடசேரியில் செயல்பட்டு வருகிறது. ஒரே துறையின் கீழ் உள்ள இந்த இருவேறு அலுவலகங்கள் வெவ்வேறு இடங்களில் செயல்படுவதால் மீனவ மக்களுக்கு சிரமம் எற்படுவதாக மாவட்ட நிர்வாகத்தின் கவனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் மீனவ பொதுமக்களின் இன்னல்களை களைந்து அவர்கள் பயன்பெறும் வகையில் மேற்படி இரண்டு அலுவலகங்களும் ஒரே இடத்தில் செயல்படும் வகையில் தற்போது வடசேரியில் செயல்படும் மீன்துறை உதவி இயக்குநர், அலுவலகத்தின் மேல்தளத்தில் பிப். 12-ஆம் தேதி முதல் மீன்துறை துணை இயக்குநர்(மண்டலம்) அலுவலகம் செயல்பட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உதவி இயக்குநர் அலுவலகத்தின் மேல்தளத்தில் செயல்பட்டு வந்த நாகர்கோவில் மீன்பிடி துறைமுக கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், பிப். 12 முதல் ராமவர்மபுரம் சற்குணவீதி, 7சி, குறிஞ்சி தெருவில் உள்ள கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## சூறாவளியில் வாழைகள் சேதம்: விவசாயிகளுக்கு ரூ.23.33 லட்சம் நிவாரணம் திருநெல்வேலி,

திருநெல்வேலி மாவட்டத்தில் சூறாவளி காற்றினால் வாழைகள் சேதமடைந்த 1364 பேருக்கு ரூ.23 லட்சத்து 33 ஆயிரத்து 550 நிவாரணத் தொகையை தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இம் மாவட்டத்தில் கடந்த 14-4-2013 மற்றும் 15-4-2013 ஆகிய தேதிகளில் வீசிய சூறாவளிக் காற்றால் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், நான்குனேரி வட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த வாழைப் பயிர்கள் சேதமடைந்தன. 50 சதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட 1364 விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500 வீதம் மொத்தம் 311.14 ஹெக்டேருக்கு ரூ.23 லட்சத்து 33 ஆயிரத்து 550 நிவாரணத் தொகை வழங்க தமிழக அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

அந்தத் தொகை திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரணத் தொகை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட உள்ளது. வங்கிக் கணக்கு இல்லாத விவசாயிகள் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலரை தொடர்பு கொண்டு கணக்கு ஆரம்பித்துக் கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியல், நிவாரண விவரம் அடங்கிய பட்டியல் ஆகியவை 4 வட்டங்களிலும் உள்ள கிராம நிர்வாக அலுவலர், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம், சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நிவாரணத் தொகையைப் பெற விவசாயிகள் தங்களது புகைப்படத்துடன் இருப்பிட ஆதாரம், சாட்சிகளுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலர் முன்பு ஆஜராகி பதிவேட்டில் புகைப்படத்தை ஒட்டி கையொப்பம் செய்ய வேண்டும். புதிய கணக்கு தொடங்க எந்தவித முன்வைப்புத் தொகையும் செலுத்தத் தேவையில்லை. விவசாயிகள் நிவாரணத் தொகை முழுவதையும் வங்கியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உணவு உற்பத்தி சாதனை எட்டும்

**நாக்பூர்** :நடப்பாண்டில், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, சாதனை அளவாக, 26.32 கோடி டன்னை எட்டும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.பருவமழைப் பொழிவு நன்கு உள்ளது மற்றும் சாகுபடி பரப்பு உயர்வு போன்ற காரணங்களால், நடப்பாண்டில், உணவு தானியங்கள் உற்பத்தி, 26.32 கோடி டன்னை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உற்பத்தியான, 25.90 கோடி டன்னை விட, 40 லட்சம் டன் அதிகம்

என, பவார் மேலும் கூறினார்.

## வேளாண் கருவிகள் வழங்கல்

**ராமநாதபுரம்:** ராமநாதபுரத்தில் தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை சார்பில் ரூ.39 லட்சத்து 92 ஆயிரம் மதிப்புள்ள வேளாண் கருவிகளை, 20 விவசாயிகளுக்கு கலெக்டர் நந்தக்குமார் வழங்கினார். இதில் ரூ.11.45 லட்சம் மானியம். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் யுவராஜ், உதவி செயற்பொறியாளர் சிதம்பரேசன், பொறியாளர்கள் சிவக்குமார், ராமர், பாஸ்கரன் பங்கேற்றனர்.

## கத்தரிக்காய் சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

**கள்ளக்குறிச்சி :** கள்ளக்குறிச்சி அருகே கத்தரிக்காய் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மழையளவு குறைந்துபோனதைத் தொடர்ந்து விவசாயிகள் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வதை தவிர்த்து, பயிர் சுழற்சி முறையில் காய்கறிகளை பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின் றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் அதிக விவசாயிகள் கத்தரிக்காய், பச்சை மிளகாய்,

சின்ன வெங்காயம் போன்ற காய்கறிளை பயிர் செய்கின்றனர்.
ஆறு மாத பயிரான கத்திரிக்காய் ஒரு ஏக்கருக்கு 10 டன்னுக்கு மேல் விளைகிறது. சொட்டு நீர் பாசனம் மூலம் சிறந்த முறையில் பராமரித்து வந்தால் ஒரு ஏக்கருக்கு 15 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.மேலும் பந்தல் அமைத்து வளரச் செய்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக விளைச்சல் பெறலாம். கிணற்று பாசனம் நிறைந்த கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் குறைந்த தண்ணீரில் அதிக லாபம் பெற கத்தரிக்காய் செடிகளை பயிர் செய்கின்றனர். வரத்து அதிகரித்துள்ள நிலையில் ரூ.30 விற்ற கிலோ கத்தரிக்காய் தற்போது ரூ.10க்கும் குறைவாகவே விலை போகிறது.

## விவசாயிகள் புதிய முயற்சி

**கச்சிராயபாளையம் :** கச்சிராயபாளையம் பகுதியில் வயல்களுக்கு களைக்கொல்லி தெளிக்கும்போது பாதிப்படையும் பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் புதிய முயற்சி மேற்கொள்கின்றனர்.
கச்சிராயபாளையம் பகுதியில் விவசாய பணிகளுக்கு ஆள்பற்றாக்குறை ஏற்படுவதுடன் கூலியும் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள களையை கட்டுப்படுத்த கிளைசால் என்னும் ரசாயன களைக்கொல்லியை பயன்படுத்துகின்றனர்.
ஆட்களால் களை எடுப்பதை விட களைக்கொல்லி பயன்படுத்த செலவு குறைகிறது. இதனால் விவசாயிகள் பலர் ரசாயன களைக்கொல்லியை அதிகம் பயன் படுத்துகின்றனர். இதன் பயன்பாட்டால் செலவு குறைந்தாலும் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கிறது.
பயிர்களை பாதிக்காமல் களைக்கொல்லி பயன்படுத்த வந்துள்ள புதிய முறை விவசாயிகளிடம் வரவேற்பை பெற்றுள் ளது. மர வள்ளி பயிரில் களைக்கொல்லி பயன்படுத்தும் போது புனல் போன்ற பிளாஸ்டிக் மூடியால் பயிர் களை மூடி, களைக்கொல்லி தெளிக்கின்றனர். இதனால் மரவள்ளி வளர்ச்சி பாதுகாக்கப்படுகிறது. இந்த பிளாஸ்டிக் மூடிகள் மருந்து கடைகளில் வாடகைக்கும்

கிடைக்கிறது. தினம் 60 ரூபாய் வாடகையில் 250 மூடிகள் கிடைக்கிறது. இந்த புதிய வரவால் விவசாயிகள் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

## சுட்டெரிக்க துவங்கியது கோடை சூடுபிடித்தது தர்பூசணி விற்பனை

**கோவை :** கோடை வெயில் சுட்டெரிக்க துவங்கியுள்ள நிலையில், வெயில் தாக்கத்தை தணிக்க பொதுமக்கள் அதிகளவு வாங்கிச் செல்வதால் தர்ப்பூசணி விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது.

தமிழகத்தில் கோடைகாலம் மார்ச் மாதம் துவங்கி, ஜூன் வரை நீடிக்கும். ஆனால் தற்போது காலநிலை மாறுபாட்டால் கடந்த சில ஆண்டுகளாக பிப்ரவரி துவக்கத்திலேயே வெயில் சுட்டெரிக்க துவங்கி விடுகிறது.இந்த ஆண்டும் பிப்ரவரி துவக்கத்திலேயே வெயில் அதிகரித்துள்ளது. இரவில் பனியின் தாக்கம் இருந்தாலும் பகல் நேரத்தில் வெயில் அதிகளவு உள்ளது. வெயிலின் தாக்கத்தை சமாளிக்க பொதுமக்கள் இளநீர், மோர், பழச்சாறுகள் உள்ளிட்டவற்றை பருகி தாகத்தை தணித்துக் கொள்வர். இவை தவிர, பொதுமக்கள் அதிகம் விரும்பி வாங்கும் பொருளாக தர்பூசணி உள்ளது. கோடைக்காலத்தில் மக்களின் தாகத்தை தணிக்கும் மிகச்சிறந்த பழமாக தர்பூசணி உள்ளது. மற்ற பழங்களை ஒப்பிடுகையில், தர்பூசணி விலை மலிவாக கிடைப்பதும் பொதுமக்கள் விரும்பி வாங்குவதற்கு முக்கிய காரணம்.

கோவையில் தற்போது தர்பூசணி விற்பனை சூடுபிடித்துள்ளது. வெயிலின் தாக்கம் அதிகளவு இருப்பதால், பிப்., துவக்கத்ததிலேயே விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்

கின்றனர். முழுபழத்தின் விலை 30 முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தர்பூசணி வியாபாரி ஒருவர் கூறுகையில்,"தற்போது முன்கூட்டியே கோடை துவங்கியுள்ளதால், அனைத்து தரப்பினரும் வாங்கிச் செல்கின்றனர். திண்டிவனம், விழுப்புரம் ஆகிய பகுதிகளிலிருந்து பழங்கள் வருகின்றன. "தர்பூசணியில் 10க்கும் அதிகமான வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் அதற்கென தனி சுவை, நிறத்தை கொண்டுள்ளன. வரத்து குறைவாக இருப்பதால் விலை அதிகமாக உள்ளது.

சில்லரைக்கு விற்கும்போது நல்ல லாபம் கிடைக்கிறது. வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் விலை குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

### கனியும் வரை காத்திரு... மாங்கனி விவசாயிகள் தீவிரம்

**ஆர்.கே.பேட்டை :** சித்திரையில் கனியும் மாங்கனிகளுக்கு இது பூக்கும் பருவம். விளைச்சலை அதிகரிக்க இப்போதே மாமரங்களை பராமரிக்கும் பணியில், விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் முதல், ஜூன் மாதம் வரை மாங்கனி சீசன் நிலவும். ஏழு மாதங்களாக, கவனிக்கப்படாமல் இருந்த மாந்தோப்புகள், தற்போது பூ பூக்க துவங்கியுள்ளன. இதையடுத்து, நெல், கரும்பு அறுவடை முடித்துள்ள விவசாயிகள், மாந்தோப்புகளை பராமரிக்கும் பணிக்கு திரும்பியுள்ளனர். முதல் கட்டமாக, பூக்கள், உதிராமல் தடுக்கும் விதமாக, மருந்து தெளித்து வருகின்றனர். கடந்த ஆண்டு மாங்கனி அதிகளவில் விளைச்சல் கண்டது. இந்த ஆண்டும், கூடுதல் விளைச்சலை மாங்கனி விவசாயிகள், எதிர்பார்த்துள்ளனர். மேலும், தோப்புகளுக்கு வேலி அமைத்து, காவலர்களையும் நியமித்து வருகின்றனர்.பழரசம் தயாரிக்கும் நிறுவனங்கள், மாமரங்களில் உள்ள பூக்களை மனதில் வைத்து, மா விவசாயிகளிடம் இப்போதே ஒப்பந்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

### விலையில்லா ஆடுகள் வழங்கல்

**கோத்தகிரி :** கோத்தகிரி கொணவக்கரை ஊராட்சிக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன. தப்பக்கம்பை பள்ளி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு கொணவக்கரை ஊராட்சி தலைவர் குப்புசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் குமார் முன்னிலை வகித்தார். இதில், ஊராட்சிக்கு உட்பட்ட 50 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் 200 ஆடுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், பயனாளிகள், ஊர் பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

## துல்லிய பண்ணை திட்டம் தொய்வு அலுவலர்கள் களப்பணியாற்ற முடிவு

**திண்டுக்கல்:** துல்லிய பண்ணை திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர்கள் இடம் பெறாததால், கிராமங்களுக்கு நேரில் சென்று பயனாளிகளை தேர்வு செய்ய தோட்டக்கலை உதவிய இயக்குனர்கள் முடிவு செய்துள்ளனர்.மாவட்ட தோட்டக்கலைத் துறையின் திட்ட சிறப்பு ஆய்வுக்கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். உணவு தானிய உற்பத்தி இலக்கினை பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தண்ணீர் வசதி உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து பிப்ரவரி இறுதிக்கும் இலக்கினை பூர்த்தி செய்யவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த இடுபொருட்கள் தற்போதுதான் தங்களுக்கு கிடைத்திருப்பதாக தோட்டக்கலைத்துறையினர் கூறினர். இந்த பொருட்களை விவசாயிகளிடம் இரண்டு வாரத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமென கலெக்டர் கேட்டுக்கொண்டார். துல்லிய பண்ணை திட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான பங்களிப்பு குறைவாக இருப்பது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. உதவி இயக்குனர்கள், வருவாய் கிராமங்களுக்கு சென்று, கிராம நிர்வாக அலுவலர்களின் உதவியோடு பயனாளிகளை தேர்வு செய்து பட்டியலில் சேர்க்குமாறு தெரிவிக்கப்பட்டது.

## காய்கறி விலை குறைவு தேங்காய் விலை உயர்வு

**திண்டுக்கல்:**காய்கறிகளின் விலை கணிசமான அளவு குறைந்திருந்தாலும், வரத்து இல்லாததால் தேங்காய் விலையில் மாற்றம் இல்லாத நிலை நீடித்து வருகிறது. மாவட்டத்திற்கு தேவையான காய்கறிகள் அனைத்தும் உள்ளூர் பகுதிகளிலேயே விளைவிக்கப்படுகின்றன. இருப்பினும் கடந்த சில மாதங்களாக காய்கறிகளின் விலைகள் அதிகரித்திருந்தன. தற்போது அனைத்து வகை காய்கறிகளும் பற்றாக்குறை இல்லாமல் சந்தைக்கு வரத்துவங்கியுள்ளன. இதனால் இவற்றின் விலை குறைந்துள்ளது. திண்டுக்கல்லில் தக்காளி ஒன்றரை கிலோ ரூ. 10 க்கும், முள்ளங்கி, பச்சை மிளகாய், வெங்காயம், பல்லாரி, கொத்தவரை, கேரட் போன்றவை ரூ. 20 க்கும், புடலங்காய், பூசணி, பீர்க்கங்காய் ரூ. 16 க்கும்,

வெண்டைக்காய் ரூ. 34 க்கும், கத்தரிக்காய் ரூ.32 க்கும் விற்கப்படுகிறது. வரும்நாட்களின் இவற்றின் விலை மேலும் குறைவதற்கான வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளில் தென்னந்தோப்புகள் கருகியதால் தேங்காய்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உள்ளங்கை அளவிலான சிறிய தேங்காய்கள் ரூ. 10 க்கும், நடுத்தர தேங்காய்கள் ரூ. 15 விற்கப்படுகின்றன. காய்கறிகள் விலை குறைந்திருந்தாலும், தேங்காய் தட்டுப்பாடு காரணமாக விலையில் மாற்றமில்லாத நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உணவு தானிய உற்பத்தியில் இந்தியா சாதனை**



புதுடெல்லி: சிறந்த விவசாயிகளுக்கு விருது வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடந்தது. இதில், மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் சரத் பவார் பங்கேற்று பேசியதாவது:விவசாயத்தில் இந்தியா சிறந்து விளங்குகிறது. நடப்பு ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 263.2 மில்லியன் டன்னாக உயர்ந்து சாதனை

படைத்துள்ளது. 2011&12 நிதியாண்டில், இது 159.32 மில்லியன் டன்னாக இருந்தது. கடந்த ஆண்டு 2வது காலாண்டில் உணவு தானிய உற்பத்தி 4.6 சதவீதம் உயர்ந்திருந்தது. அதிக அளவிலான உணவு தானிய உற்பத்தியால் மத்திய அரசின் குறிக்கோளான ‘தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை‘ செயல்படுத்த முடியும். இந்தியாவில் விவசாயம் நல்ல முறையில் நடைபெற்றுவதாலும், விவசாயிகளின் திறமையால் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. இவற்றை பார்க்கும் போது, உலகத்திலேயே மிகவும் சந்தோஷமான வேளாண்மைத்துறை அமைச்சர் நான்தான். இவ்வாறு பவார் பேசினார்.

**பாதுகாக்கப்பட்ட சாகுபடிக்கு நிழல்வலை கூடாரம்பயனாளிகள் தேர்வு**

**திருச்சி, :** திருச்சி மாவட்டத்தில் நிழல்வலை கூடாரம் அமைக்க விவசாயிகள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருவதாக தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் மா சாதாரண மற்றும் அடர் நடவு, எலு மிச்சை சாதாரண நடவு போன்ற பயிர்களுக்கு 190 எக்டேர் இலக்குகள் வரப்பெற்று 140 எக்டேர் அள வுக்கு சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும் 2ம் ஆண்டுகள் பராமரிப்புக்கு மா, எலுமிச்சை போன்ற இனங்களுக்கு 105 எக்டேர் இலக்கு வரப்பெற்று, 75 எக்டேர் வரை முடிக்கப்பட்டுள்ளது. மா, கொய்யா பயிர்களுக்கு 3ம் ஆண்டு பராமரிப்புக்கு 70 எக்டர் இலக்கீடு வரப்பெற்று 65 எக்டர் சாதனை அடையப்பட்டுள்ளது. உதிரி மலர்களுக்கு 110 இலக்கு கள் வரப்பெற்று 110 இலக்குகள் முழு சாதனை அடையப்பட்டுள்ளது. மிளகாய் மற்றும் மஞ்சள் பரப்பினை அதிகப்படுத்த 40 எக்டர் இலக்கு வரப்பெற்று 35 எக்டர் சாதனை அடையப் பெற்றுள்ளது. மா, பலா தோட்டம் புதுப் பித்தல் இனத்திற்கு 400 எக்டர் இலக்கு வரப்பெற்று 180 எக்டர் சாதனை அடையப் பெற்றுள்ளது. 370 விவசாயிகளுக்கு தொழில்நுட்ப சுற்றுலா மாநிலம் மற்றும் மாவட்டத்திற்குள் தொழில்நுட்ப பயிற்சி அளிக்க பயனாளிகள் தேர்வு பணி நடைபெற்று வருகிறது.

பாதுகாக்கப்பட்ட சாகுபடிக்கு நிழல் வலை கூடாரம் அமைக்க 4 ஆயிரம் ச.மீ. இலக்குகள் வரப்பெற்று பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது என்றார்.

**விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி**

**திருவெறும்பூர், :** திருவெறும்பூர் வட்டாரத்தில் உணவு தானிய உற்பத்தியை பெருக்குவது குறித்து நவீன தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது.

கீழக்குறிச்சியில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வேளாண் துறையும், ராலிஸ் இந்தியா நிறுவனமும் இணைந்து நடத்திய இப்பயிற்சி முகாமில், உணவு தானிய உற்பத்தியை பெருக்குவதற்கான உத்திகள் தொடர்பான பயறு வகை பயிர்கள் குறித்தும், சாகுபடி விவசாயிகளுக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

முன்னதாக, திருவெறும்பூர் வட்டார வேளாண் அலுவலர் முருகவேல் வரவேற்றார். மேலும், வேளாண் துறை சார்பில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் உணவு தானிய இயக்கத்தின் கீழ் நன் செய் தரிசு நில உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

**50%மானியத்தில் காய்கறி விதை வினியோகம்**

**திருச்சி, :** விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்தாண்டு 750 எக்டேர் பரப்பளவில் ரூ.15 லட்சம் மதிப்பிலான உயர் விளைச் சல் தரும் காய்கறி விதைகள், வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள், விதை பொட்டலங்கள் மற்றும் பழக்கன்று கள் 50 சதவீத மானிய விலையில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது.

கிராம வாரியாக விதை இயக்கங் கள் நடத்தி அதன் மூலம் விவசாயிகளுக்கு தேவை யான தொழில் நுட்பங்கள் எடுத்து கூறப்பட்டுள்ளது.  30 எக் டேர் பரப்பளவில் துல்லிய பண்ணையம், 30 எக்டரில் திசு வாழை, 5 எக்டரில் கொடிவகை காய் கறி பயிர்களுக்கு பந்தல் அமைக்கப்படுகிறது. 200 விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயி ற்சி அளிக்கப்பட உள்ளது.
தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் தொடர் ந்து நடைபெற்று வருகின்றன.சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வரையும், குறு விவசாயிகளுக்கு 2.5 ஏக்கர் வரையும் 100 சதவீத மானியமும் வழங்க அர சாணை பெறப்பட்டுள் ளது. எனவே விவசாயிகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம் என்றார்.

**பண்ணைக்குட்டையை பார்வையிட்ட தேனி மாவட்ட விவசாயிகள்**

**சிவகங்கை, :** சிவகங்கை அருகே மானாகுடி கிராமத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் அமைக்கப்பட்ட பண்ணைக்குட்டையை தேனி மாவட்ட நீர்வடிப்பகுதி விவசாயிகள் பார்வையிட்டனர்.
பட்டறிவுப் பயணமாக தேனி மாவட்டம் பெரியகுளம், சின்னமனூர், தேவாரம் விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர் சுமார் 150 பேர் இதில் பங்கேற்றனர்.
பண்ணைக்குட்டையில் மழைநீர் சேமிப்பு,  மீன் குஞ்சு விடப்படுதல், மீன் வளர்ப்பு மூலம் கிடைக்கும் லாபம், மீன் வளர்ப்பு போக எஞ்சியுள்ள நீர் விவசாயத்திற்கு பயன்படுத்தல் உள்ளிட்டவை குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர்.
இதில் தேனி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு துணை இயக்குநர் அழகு நாகேந்திரன், விரிவாக்க அலுவலர் சுரேஷ், சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி

மேம்பாட்டு முகமை உதவி செயற்பொறியாளர் ஈஸ்வரன், வட்டார பொறியாளர் ஜெயராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஆற்று பாசனப்பகுதியில் மின்மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சுபவர்கள் மீது நடவடிக்கை**

**ஆத்தூர், :** ஆற்று பாசனப்பகுதியில் மின்மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சுபவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஏத்தாப்பூர் போலீஸ் ஸ்டே ஷனை முற்றுகையிட்ட தால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட பாப்பநாயக்கன்பட்டியில் கரியகோயில் நீர்த்தேக்கம் உள்ளது. இந்த நீர்த்தேக்கத்திலிருந்து கடந்த வாரம் விவசாயத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன்படி, வசிஷ்ட நதியில் வரும் தண்ணீரை கரைகளின் அருகில் வசிக்கும் விவசாயிகள் சிலர் மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சி விடுகின்றனர். இதனால் மற்ற விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் போவதோடு, நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வாய்ப்பில்லாமல் போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்வாறு மின் மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இந்த பகுதி விவசாயிகள், மின்வாரிய அதிகாரிகள் மற்றும் மாவட்ட கலெக்டர் உட்பட வருவாய் அதிகாரிகளிடம் மனு அளித்தனர்.

இந்நிலையில், மின்மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சும் விவசாயிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நேற்று மாலை, கல்யாணகிரி, கொட்டவாடி, குமாராபாளையம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள், ஏத்தாப்பூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அவர்கள், ஏத்தாப்பூர் போலீசாரிடம் ஆற்று பாசனப்பகுதியில் மின்மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சுபவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி புகார் மனு அளித்தனர். இதுகுறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்தனர். இதையடுத்து,

முற்றுகையை கைவிட்டு விவசாயிகள் கலைந்து சென்றனர். மின்வாரிய அதிகாரிகள்

கடும் எச்சரிக்கை

வசிஷ்ட நதி பகுதியில் உள்ள விவசாயிகள் தங்களின் மின் இணைப்புகளில் இருந்து மின் மோட்டார்களை வசிஷ்ட நதி கரையில் வைத்து தண்ணீர் உறிஞ்சுவதாக புகார்கள் வந்துள்ளன. அதன் அடிப்படையில் மின்மோட்டார் வைத்து தண்ணீர் உறிஞ்சுபவர்கள் என கண்டறியப்பட்டால் அந்த மின் இணைப்பு எந்தவித முன்னறிவிப்புமின்றி உடனடியாக துண்டிக்கப்படும். எனவே வசிஷ்ட நதியிலிருந்து தண்ணீரை மின்மோட்டார் வைத்து உறிஞ்சிட வேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 7 டன் தேங்காய் பருப்பு ரூ5.4 லட்சத்திற்கு ஏலம்

**ஜலகண்டாபுரம், :** சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 7 டன் தேங்காய் பருப்பு ரூ5.4 லட்சத்திற்கு விற்பனையானது.

சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. இதில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 154 மூட்டைகளில் 7,267 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

கடந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ68க்கும், அதிகபட்சமாக ரூ73.55க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ ரூ70க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ76.85க்கும் ஏலம் விடப்பட்டது. இதன் மூலம்

ரூ5,40,000க்கு வர்த்தகம் நடைபெற்றது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு ரூ3.30 அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**இடைப்பாடியில் சூரியகாந்தி அறுவடை மும்முரம்**

**இடைப்பாடி,:** இடைப் பாடி மற்றும் சுற்றுப் பகுதியில் சூரிய காந்தி அறுவடை தொடங்கியுள்ளது.
இடைப்பாடி, கொங்கணாபுரம், குருமப்பட்டி, கோரணம்பட்டி, கோண சமுத்திரம் சமுத்திரம், புதுப்பாளை யம், ஆடையூர், பக்கநாடு உள்ளிட்ட பகுதிகளில் 500 ஏக்கருக்கு மேல் சூரிய காந்தி பயிரிடப்பட்டுள்ளது. சுமார் 90 நாள் பயிரான சூரியகாந்தி தற்போது பூ  திரண்டு அறுவடைக்கு தயாராக உள்ளது. இடை தரகர்கள் மற்றும் சிறிய அளவிலான எண்ணெய் தயாரிப்பாளர்கள் நேரிடையாக விவசாயிகளிடமே கிலோ கி35க்கு கொள்முதல் செய்து செல்கின்றனர்.
இதன்படி தற்போது இடைப்பாடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சூரிய காந்தி அறுவடை தொடங்கியுள்ளது.

**மானிய விலை தீவன திட்டம் விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு**

**சேலம், :** சேலம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்கும் திட்டத்திற்கு விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியை கருத்தில் கொண்டு கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை மானிய விலையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி சேலம் மாவட்டத்திற்கு ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, நங்கவள்ளி, கொங்கனாபுரம், தலைவாசல், மேச்சேரி, நரசோதிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ரூ.2க்கு தீவனங்கள் வழங்குவதால் விவசாயிகளிடத்தில் அதிக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட 5 இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களிலும் விவசாயிகள் நீண்ட வரிசையில் நின்று பதிவு செய்து வருகின்றனர்.

இது குறித்து கால்நடை பராமரிப்பு துறை மண்டல துணை இயக்குநர் சிவப்பிரகாசம் கூறுகையில், பதிவு எண்ணிக்கையில் தமிழகத்தின் பிற மாவட்டங்களை காட்டிலும் சேலம் மாவட்டம் முன்னிலையில் உள்ளது. எதிர்பார்த்ததை விட அதிகளவு விவசாயிகளை இத்திட்டம் சென்றடைந்துள்ளது. தற்போது வரை 10,000 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும் 5000 விவசாயிகள் வரை பதிவு செய்ய வாய்ப்பு உள்ளது. விவசாயிகளிடத்தில் உள்ள வரவேற்பால், மாவட்டத்தில் மேலும் 2 இடங்களில் உலர் தீவன கிடங்குகள் அமைக்க அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம். பிப்ரவரி 10ம் தேதிக்கு மேல் உலர் தீவன கிடங்குகள் செயல்பட துவங்கும், என்றார்.

**எலுமிச்சை விலை அதிகரிப்பு கிலோ ரூ.70க்கு விற்பனை**

**திருப்பூர், :** திருப்பூரில் கடந்த ஒரு வாரமாக எலுமிச்சையின் விலை அதிகரித்து, கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது. மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பழனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், மணப்பாறை, திருச்சி, மதுரை ஆகியப் பகுதிகளில் இருந்து எலுமிச்சை கொண்டு வரப்பட்டு திருப்பூரில் பூ மார்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வருடம் மழை குறைவால் எலுமிச்சையின் விளைச்சல் குறைந்தது. இதனால் விலை அதிகரித்தது. கடந்த 2 வாரத்திற்கு முன் எலுமிச்சையின் விலை, மூட்டை ரூ.4 ஆயிரத்திற்கும், ஒரு கிலோ ரூ.30ல் இருந்து 35 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது எலுமிச்சை மூட்டைக்கு ரூ.6500க்கும், கிலோ ரூ.70ல் இருந்து 80 வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், வருடந்தோறும் மார்ச் முதல் வாரத்தில் இருந்து எலுமிச்சையின் விலை அதிகரிக்க தொடங்கும். தற்போது பிப்ரவரியிலேயே எலுமிச்சை விலை அதிகரித்துள்ளது. இந்த வருடம் மழை மிக குறைவாக உள்ளதால் விளைச்சலும் குறைந்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால் விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. மேலும், தண்ணீர் இல்லாததால் எலுமிச்சை பிஞ்சுலேயே பழுத்தும், நோய் தாக்கியும் விளைச்சல்

குறைந்தது. வரத்து குறைவால் எலுமிச்சையின் விலை அதிகரித்துள்ளது. கிலோ ரூ.70ல் இருந்து 80 வரை விற்பதால் பொதுமக்கள் வாங்குவது குறைந்துள்ளது. 3 காய் ரூ.10 என விற்பனை செய்து வருகிறோம். இனி வரும் மாதங்களில் வெயில் அதிகரிக்கும் போது தற்போது உள்ள எலுமிச்சையின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மூட்டை ரூ.10 ஆயிரத்துக்கு மேலும், கிலோ ரூ.140க்கும் விற்பனை செய்யப்படலாம் என்றனர்.

**தாராபுரம் பகுதியில் கருகும் நெற்பயிரை காக்க அமராவதியில் தண்ணீர் திறப்பு**

**உடுமலை, :** தாராபுரம் பகுதியில் கருகும் நெற் பயிரை காக்க அமராவதி அணையில் இருந்து ஆற்றில் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இருக்கும் குறைந்த அளவு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகளை அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயி ரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் வழியாக 3500 ஏக்கர் நிலங் கள் நேரடி பாசனம் பெறுகின்றன. 10க்கும் மேற் பட்ட கூட்டுகுடிநீர்திட்டம் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஜூன் மாதம் முதல் மார்ச் வரையும், புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆகஸ்ட் முதல் ஜனவரி வரையும் தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஆண்டு பெய்த தென்மேற்கு பருவ மழையால் அணை 2 தடவைநிரம்பியது. ஆனால் ஒவ்வொரு முறை யும் பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்காகவும் அணையில் இருந்து ஆற்றி லும், பிரதான கால்வாயி லும் தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர் ந்து வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் அணைக்கு நீர்வரத்து குறைந்தது.

இந்நிலையில், தாரா புரம் பகுதி பாசனத்துக்கு கடந்த மாதம் ஆற்றில் தின மும் 400 கனஅடி வீதம் 5 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அங்கு 5 ஆயி ரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இந்த நிலையில் கிணற்று பாசனம் உள்ள பகுதியில் நெற்பயிர் தப்பி யது. கிணற்று பாசனம் இல்லாத தாராபுரம் ராஜவாய்க்கால்

பாசனத்தில் 2470 ஏக்கரில் நெற்பயிர் கதிர்கள் வந்துள்ளன. தண் ணீர் இல்லாததால் பயிர்கள் கருகும் அபாயத் தில் உள் ளன. அதை தவிர்க்க அமரா வதி ஆற்றில் உயிர் தண்ணீர் திறக்க வேண்டுமென அர சுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். தற்போது அணையின் நீர் இருப்பு 27 அடி. அதில் சேறும், சகதியும் சுமார் 7 அடிக்கு உள்ளது.

மீதம் உள்ள 20 அடி தண்ணீரில் கோடை காலத்துக்கு குடிநீர் மற்றும் அத்யாவசிய தேவைக்காக 15 அடி நீர் இருப்பு வைக்கப்படும். மீதம் 5 அடி தண் ணீர் இருப்பதால் தாராபுரம் பகுதி நெற்பயிரை காப்பாற்ற நேற்று அணையில் இருந்து உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது. வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் ஆற்றில் வழிநெடுக மோட்டார் வைத்து தண்ணீர் உறிஞ்சப்படுவதாகவும், அதை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்படி ஆற்றில் தண்ணீர் திருடப்படுகிறதா என்பதை அதிகாரிகள் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர்.

**மருந்தாளை கிராமத்தில் பயிரிடப்பட்ட பாரம்பரிய நெல் ரகம் அறுவடை**

**புதுக்கோட்டை, :** புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளிடம் அரிதான பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டு, இயற்கை முறையில் மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரால் சாகுபடி செய்த வயலில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி சோமசுந்தரம் முன்னிலையில் அறுவடை நடைபெற்றது.

நபார்டு வங்கியின் புதுமைப்பண்ணை திட்டத்தின் கீழ் ரோஸ் தொண் டு நிறுவனம், மக்கள் மத்தியில் அழிந்துவிட்ட பாரம்பரிய நெல் ரகங்களை மீண்டும் சாகுபடி செய்து, இக்கால விவசாயிகள் மத்தியில் மீண்டும் அறிமுகப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இது குறித்து நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி சோமசுந்தரம் கூறியதாவது:

நம் முன்னோர் எதிர்ப்பு சக்தி மிக்க, வறட்சியையும், வெள்ளத்தையும், பூச்சி தாக்குதலையும் தாங்கி வளரக் கூடிய பல்வேறு வகையான பாரம்பரிய நெல் ரகங்களை காலங்காலமாக பயிரிட்டு பயன்படுத்தி வந்தனர். ஆனால், இவை 50 வருடங்களில் அழிந்து போனது. அவற்றை மீட்டுப் பாது காத்து, அதை மக்களி டம் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளாக மாப்பிள்ளைச் சம்பா, கருடன்சம்பா, பனங்காட்டு குடவாழை, பூங்கார், சிவப்புக்கவுணி, கருங்குறுவை, கருத்தக்கார், சண்டிகார், குறுவைக்களஞ்சியம், தங்கச்சம்பா, தூயமல்லி, இலுப்பைப்பூ சம்பா, மிளகி, மஞ்சள்பொன்னி, கைவிரைச் சம்பா, செம்புளிச்சம்பா, கிச்சடிச்சம்பா, சொர்ணமுசிறி, கருப்புக்கவுணி, அறுபதாம் குறுவை, சம்பாமோசனம், கந்தசாளா, சீரகச்சம்பா, காட்டுயானம், சிவப்புக்குருவிக்கார் போன்ற நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

3ஆண்டுகளில் 30 ஏக்கர் பரப்பளவில் சோ தனை முறையில் சாகுபடி செய்யப்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள், புதுக் கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமல் லாது, மற்ற மாவட்ட விவசாயிகளுக்கும் கொடுக்கப்பட்டு கிட்டத்தட்ட 150 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, இந்த வறட்சியிலும் விளைச்சல் கண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதேப்போல் மருதாந்தளை கிராமத்தில் மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரால் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு விவசாயி கணேசன் என்பவர் வயலில் பயிரிடப்பட்ட கருடன்சம்பா நெல் ரகம் நன்கு விளைந்த நிலையில் இந்திய விவசாயிகள் சங்க புதுக்கோட்டை மாவட்ட தலைவர் தனபதி, இயற்கை விவசாயிகள் அன்பழகன், மருதச்சாமி, முத்துக்கருப்பன், ரோஸ் நிறுவன இயக்குநர் ஆதப் பன் ஆகியோரின் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது.

இச்சோதனை அறுவடையில் ஏக்கருக்கு 3150 கிலோ நெல்லும், 6300 கிலோ வைக்கோலும் கிடைத்தது.

இந்த மகசூல் அளவானது, இன்று புழக்கத்தில் இருக்கும் மற்ற வீரிய நெல் ரகங்களை விட கூடுதலாகும். மேலும், இந்த நெல் ரகம் முழுமையான இயற்கை விவசாய முறை யிலும், திருந்திய நெல் சாகு படி முறையிலும் அன்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் முன்னிலையில் நடவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு சிறு தானியங்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி**

**புதுக்கோட்டை, :**புதுக் கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வேளாண் வணிக மையத்தில் அட்மா விவாக்க சீரமைப்பு திட்டம் சார்பில் விவசாயிகளுக்கான சிறு தானியங்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி நடந்தது. அட்மா திட்ட இயக்குனர் ஷாஜகான் தலைமை வகித்தார். பயிற்சியில் கேழ்வரகு, கம்பு, சோளம், மக்காச்சோளம், தினைவரகு உள்ளிட்ட தானியங்களில் மதிப்பு கூட்டுதலின் முக்கியத்துவத்தை வேளாண் வணிக துணை இயக்குனர் அண்ணாமலை விளக்கி பேசினார்.

சிறுதானியங்களில் உணவு தயாரிப்பு முறை குறித்து தமிழ்நாடு வேளாண் மை பல்கலைக்கழக மதுரை மனையியல் கல்லூரி முது நிலை ஆராய்ச்சியாளர் முனைவர் ஜோதிலட்சுமி விளக்கம் அளித்தார். மேலும் சிறுதானிய புட்டு தயாரித்தல் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். சிறுதானியங்களில் மதிப்பு கூட்டுதல் கையே ட்டை விவசாயிகளுக்கு வழங்கி மதிப்பு கூட்டுதலின் அவசியத்தை அட்மா திட்ட இயக்குனர் ஷாஜகான் எடுத்துரைத்தார். விளைபொருள் குழுக் கள் சிறுதானிய மதிப்பு கூட்டுதல் மேற் கொள்ள வேளாண் வணிகப்பிரிவின் நடவடிக்கை குறித்து வேளாண் வணிக துணை இயக்குனர் அண்ணாமலை, அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்ட செயலாக்கங்கள் குறித்து உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் சாந்தி ஆகியோர் விளக்கி பேசினர். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள்

கிருஷ்ணமூர்த்தி, ராதாகிருஷ்ணன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமையா, சுப்பிரமணியன் செய்திருந்தனர். முன்னதாக திருமயம் வேளாண்மை உதவி இயக்குனர் ராமமூர்த்தி வரவேற்றார். அட்மா மாவட்ட இணைப்பு அலுவலர் ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

திருமயம்,புதுக் கோட் டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**அன்னவாசல் அருகே சான்று விதை உற்பத்தி விதை கிராம திட்டப்பயிற்சி**

**அன்னவாசல், :** அன்னவாசல் ஒன்றியத்தை சேர்ந்த பனம்பட்டி ஊராட்சியில் வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கான தரமான சான்று விதை உற்பத்தி விதை கிராமத் திட்டப்பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு பனம்பட்டி ஊராட்சி தலைவர்  மலையப்பன் தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் மாரிமுத்து முன்னிலை வகித்தார். அன்னவாசல் வேளாண்மை உதவி இயக்குநர் சிங்காரம் தரமான சான்று விதை உற்பத்தி பற்றிய தொழில் நுட்பங்களான விதை தேர்வு, உயிர் உர விதை நேர்த்தி, நுண்ணூட்டம் பயன்பாடு மற்றும் உர மேலாண்மை பற்றி கூறினார். அன்னவாசல் வேளாண் அலுவலர் சுமித்ராதேவி, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி கூறினார்.

வேளாண் அலுவலர் வேல்முருகன், வேளாண்மை உதவி அலுவலர் மணிவேல், அமலி ஜாஸ்மின், ராஜ்குமார், தொழில் நுட்ப அலுவலர்கள் சக்திவேல், ஆரோக்கியராஜ் கலந்து கொண்டு பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவ ருக்கும் மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

**நாக்பூரில் க்ருஷி வசந்த் பட்டறிவு பயணம் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவும் விவசாயிகளுக்கு கலெக்டர் வாழ்த்து**

**விருதுநகர், :** மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூர் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் “க்ருஷி வசந்த்“ எனும் தேசிய வேளாண் கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியில் மாவட்ட விவசாயிகள் 109 பேர் கலந்து கொள்ள உள்ளனர். இவர்களின் பயணத்திற்கான ஆயத்த கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆயத்த கூட்டத்தில் கலெக்டர் ஹரிஹரன் பேசுகையில், விவசாயிகள் பட்டறிவு பயணத்தின் போது கண்காட்சியில் இடம் பெறும் கருத்துகளை கற்று கொண்டு வந்து வோண் உற்பத்தியை அதிகரிக்க பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த கண்காட்சி விவசாயிகளின் வாழ்வு மேம்படவும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவும் என்றார். நிகழ்ச்சியில் டிஆர்ஓ முனுசாமி, வேளாண் இணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் காவிரி கரையில் தர்பூசணி விளைச்சல் அமோகம்**

**மேட்டூர், :** மேட்டூர் காவிரிகரையில் முதன் முறையாக தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அறுவடை முடிந்து விற்பனைக்கு தயாராக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மேட்டூர் காவிரிகரையில், தர்பூசணி விளைச்சல் அமோகமாக உள்ளது. மேட்டூர் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால், தரையில் விவசாயிகள் பல வகையான பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். கோட்டையூர், நாகமரை, ஒட்டனூர், பண்ணவாடி, ஏமனூர் உள்ளிட்ட பகுதிகளில் ராகி, நிலக்கடலை, கம்பு, சோளம் ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

மூலக்காடு, விராலிக்காடு பகுதிகளில் முதன் முறையாக தர்பூசணி சாகுபடி செய்துள்ளனர். தற்போது, தர்பூசணி அறுவடை முடிந்து, விற்பனைக்கு வந்துள்ளது. விலை ரூ10 முதல் ரூ150 வரை விற்பனை செய்யப்படுகிறது. காவிரி கரையில், தர்பூ சணி விளைச்சல் அமோக இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**வரத்து குறைவு எதிரொலி பசுந்தேயிலை வார விலை உயரும்**

**குன்னூர், :**நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதில் விற்பனையாகும் தேயிலை தூளி ன் விலைக்கு ஏற்றார் போல் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்கள் நிர்ணயம் செய் து விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். கடந்த ஒரு மாதமாக உறைபனியின்

தாக்கத்தால் தேயிலை மகசூல் குறைந்துள்ளது. இதனால் ஏல மையங்களில் குளிர்கால தேயிலைக்கு அதிகளவில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட ரகங்களுக்கு கணிசமான விலை வழங்கப்படுகிறது.
அதனடிப்படையில் இந்த வாரம் பசுந்தேயிலைக்கு சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.16, நடுத்தரத்திற்கு ரூ.110 முதல் ரூ.21, உயர் ரகத்திற்கு ரூ.24 முதல் ரூ.27 விலை வழங்கப்பட்டுள்ளது.
பசுந்தேயிலை உற்பத்தி குறைவால் தேயிலை தூளின் விலை உயர்ந்துள்ளது. வரும் வாரங்களிலும் தேயிலை உற்பத்தி குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் தேயிலை வாரியத்தின் சார்பில் நிர்ணயிக்கப்படும் மாதாந்திர விலையை விட வார விலை கூடுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல் அறுவடை இயந்திரங்களை குறைந்த வாடகையில் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

**தஞ்சை, :** நெல் அறுவடை இயந்திரங்களை குறைந்த வாடகையில் பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. நெல் அறுவடை இயந்திரங்கள் குறைந்த வாடகையில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரு கிறது. இதன்படி சக்கரம் பொருத்தப்பட்ட அறுவ டை இயந்திரம் வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.910, பட்டை பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரம்
வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,530 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
தஞ்சை, ஒரத்தநாடு, திரு வையாறு, பட்டுக்கோட் டை, பேராவூரணி வட்ட த்தை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, பண்டக வளாகம், கிருஷ்ணாநகர், மருத்துவக்கல்லூரி சாலை, மானோஜிப் பட்டி வழி, தஞ்சை 613004 என்ற முகவரியில் இயந்திரங்களை வாடகைக்கு பெற்று கொள்ளலாம்.
கும்பகோணம், பாப நாசம், திருவிடைமருதூர் வட்டத்தை சேர்ந்த விவசாயிகள்,

உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 22 கோமதி நகர், செக்காங்கண்ணிரோடு, கும்பகோணம் என்ற முகவரியில் வாடகை முன்பணம் செலுத்தி இயந்திரங்களை வாடகைக்கு பெற்று கொள்ளலாம். வா டகை வசூல் செய்வது

தொடர்பாக புகார் இருந்தால் செயற்பொறியா ளர், வேளாண்மை பொ றியியல் துறை, 17, ராஜா சரபோஜி நகர், புதிய பேருந் து நிலையம் எதிரில், தஞ்சை மற்றும் 04362- 235570 என்ற தொலைபேசி எண் ணில் தொடர்பு கொள்ள லாம். இவ்வாறு கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

**நெல் கொள்முதல் பணியாளர்கள் மீது விவசாயிகள் புகார் கொடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் கலெக்டர் எச்சரிக்கை**

**தஞ்சை, :** நெல் கொள்முதல் பணியாளர்கள் மீது விவசாயிகள் புகார் கொடுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டம் மாரியம்மன்கோவில், குளிச்சப்பட்டு, வளாமரக்கோ ட்டை மற்றும் காட்டூர், ஊராட்சிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கலெக்டர் சுப்பையன்  நேற்று ஆய்வு நடத்தினார்.

பின்னர் நிருபர்களிடம் கலெக்டர் கூறுகையில், தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிர் அறுவடை சிறப்பாக நடந்து வருகிறது. அறுவடை செய்த நெல்லை 402 நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 44 ஆயிரத்து 776 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும்

செய்து கொடுக்கப்பட்டுள் ளது. விவசாயிகளுக்கு தேவையான களம், நெல்தூற்றும் இயந்திரம் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தேவை யான அளவு சாக்குகள் இரு ப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளுக்கும் வங்கிகள் மூலம் பணம் பட்டுவாடா செய்வதற்கு நெல் கொள்முதல் பணியாளர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தாமதம் இல்லாமல் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்து அவர்கள் விருப்பப்படும் வகையில் ரொக்கமாகவோ, வங்கிகள் மூல மோ பணம் கொடுக்கப் படும்.

விவசாயிகளிடம் இருந்து புகார்கள் வந்தால் தொடர்புடைய பணியாளர்கள் மீது உடனுக்குடன் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதனை கண்காணிக்க விஜிலன்ஸ் கண்காணிப்பு குழு தொட ர்ந்து பணியில் இருந்து வரும். கொள்முதல் நிலைய பணியாளர்கள் வங்கிகள் மூலம் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை விவசாயிகளிடம் எடுத்துக்கூற வேண்டும். அதற் கான விண்ணப்ப படிவம் மாவட்டம் முழுவதும் அனைத்து நெல்கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இல்லை என்றால் வங்கி கணக்கு எண் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்க நகலை பெற்றுக் கொ ண்டு பணம் விரைவில் வழங்கப்படும். ரூ 10 லட்சம் அளவிற்கு நெல் கொள் முதல் செய்யப்பட்டாலும் உடனடியாக பட்டுவாடா செய்யப்படும். எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை உயர் அலுவலர்களிடம் தெரிவித்து உடனுக்குடன் நெல்லை ஏற்றி அனுப்ப வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் சுப்பையன் கூறினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக உதவி மேலாளர்கள் நாகராஜன், முரு கேசன் உடன் இருந்தனர்.

### உணவு பதப்படுத்தும் தொழில் வளர்ந்தால்தான் விவசாயம் வளரும் தொழில்நுட்ப கருத்தரங்கில் தகவல்

**தஞ்சை, :** உணவு பதப்படுத்தும் தொழில் வளர்ந்தால்தான் விவசாயம் வள ரும் என்று உணவு தொழில்நுட்ப தேசிய அளவிலான கருத்தரங்கில் தஞ்சை கலெ க்டர் சுப்பையன் பேசினார்.

தஞ்சையில் உள்ள இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கழகம் சார்பில் உண வு தொழில் நுட்பம் குறித்து மாணவர்கள் நடத்தும் முதலாவது தேசிய அளவி லான கருத்தரங்கை கலெ க்டர் சுப்பையன் துவங்கி வைத்து பேசியதாவது:

தஞ்சை நெற்களஞ்சியம் விவசாயத்தில் புகழ்பெற்ற அளவிற்கு உணவு

பதப்படுத்தும் தொழிலில் இல்லை. விவசாயத்திற்கும், பதப்படுத்துவதற்கும் பெரிய இடைவெளி உள்ளது. உணவு பதப்படுத்தும்
தொழில் செய்ய முன்வருபவர்க ளை ஊக்கப்படுத்தி உதவி கள், வசதிகள் செய்து தர மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது. விவசாயிகள் த விர பொதுமக்கள் முன்வந்தாலும் அனைத்து உதவிகளும் செய்து தரப் படும். நம் நாட்டில் விவ சாயம் பெரிய துறையாக உள்ளது. ஆனால் பதப்படுத்தம் தொழில் பங்களிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. பத ப்படுத்தும் தொழில் வளர்ந்தால்தான் விவசாயம் வள ரும். மாணவர்கள் வருங்க £ல தூண் கள். மாணவர்கள் உணவு பதப்படுத்தும் தொ ழிலை எடுத்து செயல்படுத் த வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழிலில் ஏராள மான வாய்ப்புகள் உள்ளது. தேசிய அளவில் நடைபெறும் இந்த கருத்தரங்கம் உலக அளவில் நடைபெற வேண்டும் என்று கூறினார். இதில் இந்திய பயிர் பதன தொழில் நுட்ப கழகத்தின் இயக்குநர் அழகுசுந்தரம், பேராசிரியர் வேல், செயலாளர் வெங்கடேஸ்வ ரன்,ஆச்சி மசாலா நிறுவ னர் பத்மசிங்ஐசக், மற்றும் விஞ்ஞானிகள் மற்றும் பலர் கலந்து கொண் டனர்.

**கத்தரிக்காய் விலை உயர்வு**

**மதுரை, :**மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்): நாட்டு தக்காளி-10, கத்தரிக் காய்-40, வெண்டைக் காய்-30, பல்லாரி-15, சின் ன வெங்காயம்-30, உருளைக்கிழங்கு-20, சேப்பங்கிழங்கு-40, கருணை-40, கேரட்-15, பீட் ரூட்-20, பட்டர் பீன்ஸ்-80. காய்கறி மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், 'தற்போது கத்தரிக்காய் வரத்து குறைந்துள்ளதால் கடந்த வாரம் வரை கிலோ ரூ.20க்கு விற்கப்பட்டது நேற்று கிலோ ரூ.40ஆக அதிகரித்துள்ளது' என்றார்.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 26.32 கோடி டன்னாக உயரும்**



2013–14 வேளாண் பருவத்தில் (ஜுலை–ஜுன்) உணவு தானியங்கள் உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு 26.32 கோடி டன்னாக அதிகரிக்கும். 2011–12 பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 25.90 கோடி டன்னாக உயர்ந்து இருந்தது. நடப்பு பருவத்தில் உற்பத்தி இதனை காட்டிலும் 40 லட்சம் டன் அதிகரிக்கும் என மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

சென்ற ஆண்டில் நாட்டின் சில பகுதிகளில் வறட்சி காணப்பட்டதால் உணவு தானியங்கள் உற்பத்தி 25.53 கோடி டன்னாக குறைந்தது. நடப்பு ஆண்டில் பருவ மழை நன்றாக இருந்தது. கரீப் மற்றும் ரபி பருவ பயிர்கள் சாகுபடி நன்றாக இருந்ததால் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த துறைகளின் உற்பத்தி 4.6 சதவீதம் அதிகரிக்கும் என மத்திய புள்ளியல் துறை தனது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது. இது சென்ற ஆண்டில் 1.4 சதவீதமாக இருந்தது.

சர்வதேச அளவில் அரிசி ஏற்றுமதியில் முதலிடத்திலும், கோதுமை மற்றும் பருத்தி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்திலும் இந்தியா உள்ளது. பால் மற்றும் தோட்டபயிர்கள் உற்பத்தியில் நம்நாடு முன்னணியில் உள்ளது.

**மாநில பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு அமைச்சர் பி.பழனியப்பன் வழங்கினார்**



**தர்மபுரி,**

தர்மபுரியில் நடைபெற்ற வேளாண் கண்காட்சியில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட் டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு ரொக் கப்பரிசுகளை அமைச் சர் பி.பழனியப்பன் வழங்கினார்.

<u>வேளாண் கண்காட்சி</u>

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுபடி விவ சாயிகள் வேளாண் உற்பத் தியை இருமடங்காக்கி அதன் மூலம் 3 மடங்கு லாபம் பெறும் வகையில் வேளாண் தொடர் புடைய துறைகளின் சார்பில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தர்மபுரி கலெக் டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. ஒரு வாரம் நடைபெறும்

இந்த கண்காணி தொடக்க விழா கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. வேளாண் இணை இயக்குனர் மோகன் வரவேற்று பேசி னார்.

விழாவில் உயர்க்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப் பன் கலந்து கொண்டு வேளாண் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வை யிட்டார். பின்னர் வறட்சி காலத்தில் கால்நடைகளை பராமரிக்க செட்டிக்கரை, பென்னாகரம், மொரப்பூர் ஆகிய 3 இடங்களில் அமைக் கப்பட்டு உள்ள உலர்தீவனம் வழங்கும் கிடங்குகளை திறந்து வைத்தார். பின்னர் மக்காச் சோளம் சாகுபடி குறித்த கருத்தரங்கை அவர் திறந்து வைத்தார். இதில் மாநில அள விலான பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும், 2-ம் பரிசாக ரூ.25 ஆயிரமும், 3-ம் பரிசாக ரூ.10 ஆயிரமும் என மொத்தம் ரூ.4 லட்சத்து 45 ஆயிரத்தை வழங்கினார். மேலும் ரூ.17½ லட்சம் மதிப் பிலான பல்வேறு வேளாண் உபகரணங்களை அமைச்சர் வழங்கினார். இந்த கண் காட் சியை ஏராளமான விவ சாயி கள் பார்வையிட்டனர்.

தாலிக்கு தங்கம்

இதனை தொடர்ந்து தர்ம புரி அரசு மருத்துவ கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு 1007 பயனாளிகளுக்கு தலா 4 கிராம் தங்கம் மற்றும் ரூ.3 கோடியே 23 லட்சம் மதிப்பி லான திருமண நிதியுதவிகளை வழங்கினார். மேலும் இந்த விழாவில் 218 கிராம செவிலி யர்களுக்கு விலையில்லா மடிக் கணினி மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு சுழல் நிதி, 2011-12 மற்றும் 2012-13 ஆகிய நிதியாண்டு களில் சிறப் பாக செயல்பட்ட வங்கிகளுக்கு விருதுகளை அமைச்சர் வழங்கினார்.

இந்த விழாக்களில் கே.பி. அன்பழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் டி.ஆர். அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் ராமர், திட்ட அலுவலர் வீரனன் மற்றும் நகராட்சி தலைவர் சுமதி, ஒன்றியக்குழு தலைவர் நிர்மலா கோவிந்த சாமி, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் டாக் டர் இளங்கோவன், சுகாதாரத் துறை துணை இயக்குனர் விஜயலட்சுமி மற்றும் வங்கி

அதிகாரிகள், அரசு அலுவலர் கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்ட னர். முடிவில் புதுவாழ்வு திட்ட மாவட்ட அலுவலர் பத்மாமணி நன்றி கூறினார்.

**தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு சரக்குரெயிலில் 954 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டன**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் 402 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

அதன்படி நேற்றுபிற்பகல் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்பு சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 23 ஆயிரத்து 850 நெல் மூட்டைகள் அடங்கிய 954 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து விருதுநகருக்கு அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன.

**பருத்தியில் காய்ப்புழுவை கட்டுப்படுத்துவது எப்படி? பூச்சியியல் துறை பேராசிரியர் விளக்கம்**

பருத்தியில் காய்ப்புழுவைக் கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக அம்பை நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் இளஞ்செழியன்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

<u>பூ மொட்டுகள் உதிர்வு</u>

நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் குறிப்பாக கோவில்பட்டி வட்டார பகுதிகளில் பருத்தியானது மானாவாரிப் பயிராகவும், இறவைப்பயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. தற்பொது பருத்தி செடிகளில் உள்ள பூ மொட்டுகள் (சப்பைகள்) உதிர்கின்றன.

இதனால் பருத்தியில் மகசூல் இழப்பு ஏற்படும். இதற்கு காரணம் பருத்தியைத் தாக்கும் காய்ப்புழு. இதன் தாக்குதலால் சுமார் 30 முதல் 40 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இவை பருத்தி தவிர மக்காச்சோளம், சூரியகாந்தி, பயறு வகைகள், தக்காளி போன்ற 181–க்கும் அதிகமான பயிர்களையும், களை செடிகளையும் தாக்குகின்றன. இவை எல்லா மருந்துகளுக்கும், குறிப்பாக செயற்கை பைரித்ராய்டு மருந்துகளுக்கு எதிர்ப்புத்தன்மையாகி விட்டது.

<u>காய்ப்புழுவின் தாக்குதல்</u>

இளம் புழுவானது இலைகளை உண்கின்றன. வளர்ச்சியடைந்த புழுவானது சப்பைகளையும், காய்களையும் துளையிட்டு உள்ளே உள்ள பகுதிகளை உண்கின்றன. இது தனது தலையை மட்டும் உள்ளே நுழைத்து உள்ளே உள்ள பகுதிகளை உண்கின்றன. மீதி உள்ள உடம்பானது காய்களுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட சப்பைகளானது விரிந்திருக்கும். மேலும், செடிகளில் உள்ள பூ மொட்டுகள் (சப்பைகள்) உதிர்ந்து விடுகின்றன.

தாய் பூச்சியானது மஞ்சள் கலந்த வெண்ணிற முட்டைகளை தனித்தனியாக இலைகளின் மேற்பகுதியிலும், சப்பைகளின் மீதும் இடுகின்றன. முட்டையிலிருந்து வெளியே வரும் புழுவானது பச்சை, மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும். புழுவானது மண்ணிற்குள் சென்று கூட்டுப்புழுவாக மாறும். கூட்டுப்புழுவிலிருந்து வெளியே வரும் அந்துப்பூச்சியானது பழுப்பு நிறத்தில் இருக்கும். அவற்றின் பழுப்பு நிற முன்னிறக்கையில் 'வி' வடிவ திட்டு காணப்படும். வெண்ணிற பின்னிறக்கையின் ஒரமானது கருப்பு நிறத்தைக் கொண்டிருக்கும்.

<u>காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த...</u>

ஒரு எக்டேருக்கு அமெரிக்கன் காய்ப்புழு இனக்கவர்ச்சி பொறி 12 என்ற அளவில் வைத்து அந்துப்பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம்.

கண்ணாடி இறக்கைப் பூச்சி இரை விழுங்கிகளை ஒரு எக்டேருக்கு 1 லட்சம் என்ற அளவில் விதைத்த 6–வது மற்றும் 13, 14–வது வாரங்களில் விட வேண்டும். ஒரு எக்டேருக்கு முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் 6.25 சிசி எனற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் விதைத்த 45–ம் நாள் முதல் மூன்று முறை விட வேண்டும். பூ பூக்கும் பருவத்தில் ஒரு எக்டேருக்கு குளோர்ஆன்ட்ரனிலிபுரோல் 18.5% எஸ்ஸி 150 மில்லி அல்லது புளுபென்டியமைடு 39.35 எஸ்ஸி 100–125 மில்லி அல்லது இன்டாக்சகார்ப் 14.5 இசி 500 மில்லி அல்லது பிப்ரோனில் 5 எஸ்ஸி 2 ஆயிரம் மில்லி அல்லது புரோபனோபாஸ் 50 இசி 1,750–2,500 மில்லி அல்லது ஸ்பினோசேடு 45 எஸ்ஸி 165–220 மில்லி அல்லது லூபனுரான் 5.4 இசி 600 மில்லி அல்லது நோவலூரான் 10 இசி 1000 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் 20 இசி 1250 மில்லி என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். காய் பிடிக்கும் பருவத்தில் ஒரு எக்டேருக்கு குயினால்பாஸ் 25 இசி 2000 மில்லி அல்லது பைரகுளோபாஸ் 50 இசி 1500 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும். ஒட்டும் திரவம் 1 மில்லி/லிட்டர் என்ற அளவில் மருந்துடன் கலந்து தெளிக்க வேண்டும்.

ஒரே மருந்தினை திரும்ப திரும்ப அடிக்காமல் மருந்துகளை சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும்.

<u>பயிர் சுழற்சி முறை</u>

அடுத்த பருவத்தில் வயலில் தொடர்ச்சியாக பருத்தி பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை கடைப்பிடிக்க வேண்டும். மறுதாம்பு பயிர் விடுவதை தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக தழைச்சத்து உரம் இடக்கூடாது. பொறிப்பயிராக கேந்திப்பூவை பயிரிட்டு அமெரிக்கன் காய்ப்புழுவின் அந்துப் பூச்சியைக் கவர்ந்து, அதனுடைய முட்டையை பொறுக்கி அழிக்க வேண்டும்.

இத்தகவலை உதவிப் பேராசிரியர் இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.